பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 09 2026 FRIDAY 7 15 PM ஆகாஷவாணி – செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பிரிக்ஸ் நாடுகள் வெளிப்படையான வர்த்தகத்தையும், முதலீட்டு நெறிமுறைகளையும் உறுதி செய்ய வேண்டும் என்று வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

- திருக்குறளின் பெருமையை பிரதமர் திரு. நரேந்திர மோடி உலகெங்கும் கொண்டு சேர்த்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் 4 ஆயிரத்து 500 செவிலியர்கள் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பிரிக்ஸ் வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

உலக அளவில் வர்த்தகம் எவ்வித தடையுமின்றி நடைபெற வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

வர்த்தக தடைகளை களைய வேண்டும் என்ற நோக்கில் இந்தியா செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர், 40க்கும் மேற்பட்ட நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

முன்னதாக, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன் பிரதமர் பேச்சு நடத்தினார்.

பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம் மற்றும் கலாச்சாரத்துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுகளின் போது விரிவாக விவாதிக்கப்ட்டதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பேச்சுக்களின் போது, ரஷ்யாவுக்கு வருமாறு அந்நாட்டு அதிபர் அழைப்பு விடுத்ததாகவும், இந்த அழைப்பினை பிரதமர் ஏற்றுக் கொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

பிரிக்ஸ் நாடுகள் வெளிப்படையான வர்த்தகத்தையும், முதலீட்டு நெறிமுறைகளையும் உறுதி செய்ய வேண்டும் என்று வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பிரிக்ஸ் வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சீரான பொருளாதார்தை உறுதி செய்வதை இலக்காக கொண்டு பிரிக்ஸ் வர்த்தக அமைப்பு செயல்பட வேண்டும் என்றும் திரு. ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

திருக்குறளின் பெருமையை பிரதமர் திரு. நரேந்திர மோடி உலகெங்கும் கொண்டு சேர்த்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த முயற்சிக்கு மேலும் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுக்கு திருக்குறளின் ரஷ்ய மொழிபெயர்ப்பு நூலை பிரதமர் பரிசளித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது, தமிழர்களுக்கு பெருமிதமளிக்கும் தருணம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற தமிழரின் உயரிய பண்பாட்டுச் சிந்தனையைப் போலவே, திருக்குறளின் அறம் பொருள் இன்பம் குறித்த வாழ்வியல் நெறிகள் உலக மக்கள் அனைவரையும் சென்றடையட்டும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

உலக பொருளாதாரத்தில் நான்கில் ஒரு பங்கினை பிரிக்ஸ் நாடுகள் கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், புதுதில்லியில் நடைபெறவுள்ள உச்சிமாநாடு, பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்த உதவிடும் என்று கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

புதுமை கண்டுபிடிப்புகளுக்கான உரிமங்களை பாதுகாப்பதற்கான நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச நிதி தொழில்நுட்ப மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், 8 ஆயிரம் நிறுவனங்கள் பங்கேற்றதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>>>><<<<<<<

தேசிய கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இயக்கத்தின் கீழ் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுமிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்த சாதனையை படைத்துள்ளதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதாரப் பணியாளர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்துவதற்கான இந்த இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி வைத்ததை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகுதிவாய்ந்த பெண் குழந்தைகள் அனைவருக்கும் இந்த தடுப்பூசி செலுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

*புதுதில்லியில் கனிமவளங்கள் தொடர்பாக சர்வதேச உச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*உலக அளவில் மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*கனிம வளங்கள் துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*முக்கிய துறைகளில் தனியார் பங்களிப்பிற்கும் மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.*

*>>>>>>><<<<<<<*

*விநாயகர் சதுர்த்தியை ஒட்டி, சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளை பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கேட்டுக் கொண்டுள்ளார்.*

*ஆந்திர மாநிலம், ஸ்ரீகாகுளத்தில் மாணவர்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளை வழங்கி அவர் பேசினார்.*

*உள்ளூர் கைவினைக் கலைஞர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், அவர்களிடமிருந்து விநாயகர் சிலைகள் பெறப்படுவதாக அவர் தெரிவித்தார்.*

*இதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.*

*>>>>>>><<<<<<<*

*தமிழகத்தில் 4 ஆயிரத்து 500 செவிலியர்கள் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.*

*மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் - அருண்ராஜ் 59 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*கேரளத்தில் மின்விநியோகம் தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் திரு. V.D. Satheesan அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.*

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த ஆய்வின்போது மின்வெட்டு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஆந்திராவில் சிறு குறு தொழில்துறை வளர்ச்சிக்கும், புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக அம்மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. Durgesh கூறியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில் சிறு குறு தொழில் துறையினரின் வர்த்தக கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த துறையின் மூலம் 50 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஒரு லட்சத்து 75 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு. Durgesh கூறினார்.

>>>>>>><<<<<<<

அஸ்ஸாமில் உள்ள Nagaon மக்களவைத் தொகுதிகட்கான இடைத்தேர்தலில் பிஜேபி சார்பில் திரு. Debasish Sharma போட்டியிடுவார் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இந்த தொகுதியில் அடுத்த மாதம் ஆறாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9 ஆம் தேதி மேற்கொள்ளப்படும்

>>>>>>><<<<<<<

ஹிமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமது அரசு வழங்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. Sukhvinder Singh Sukhu கூறியுள்ளார்.

இன்று சிம்லாவில் இந்த பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

மாணவர் விடுதிகளில் வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அம்சங்கள் விடுதிகளில் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. Sukhvinder Singh Sukhu கூறினார்.

>>>>>>><<<<<<<

*மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி தொடர்பான தேசிய பயிற்சி முகாம் புதுதில்லியில் நடைபெற்றது.*

*கடந்த 4 நாட்கள் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில், நாடுமுழுவதிலுமிருந்து பயிற்சியாளர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இந்த பயிற்சியாளர்கள், கணக்கெடுப்பு பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவார்கள் என்று அவர் மேலும் கூறுகிறார்.*

*>>>>>>><<<<<<<<*

*ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-1 கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.*

*>>>>>>><<<<<<<<*

*17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shaina Manimuthu அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>>END<<<<<<<<*